கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2012/2013
(யூலை/ஆகஸ்ட் 2015)

# ECOS 4101 Advanced Monetary Theory & Policy

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

---

01.(a) பெறுமதியைச் சேமித்து வைக்கும் கருவியாகப் (Store of value) பணம் எவ்வாறு தொழிற்படுகிறது என்பதைச் சுருக்கமாக விளக்குக. அதனூடாகப் பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் காணப்பட்ட குறைபாடு எவ்வாறு நிவர்த்தி செய்யப்பட்டது?

(08 புள்ளிகள்)

(b) மக்கள் தமது கையில் பணத்தைச் சேமித்து வைப்பதை பொதுவாக விரும்பமாட்டார்கள் என்ற கருத்தை பழம் பொருளியலாளர்கள் எவ்வாறு நியாயப்படுத்தினார்கள்?

(04 புள்ளிகள்)

(c) "ஒரு பணப்பொருளாதாரத்தில் வீட்டுத்துறையினரின் சேமிப்பானது இடம் பெற்றிருந்தாலும்கூட சேயின் விதி ஏற்றுக்கொள்ளப்படத்தக்க விதியாகவே காணப்படும்." பழம்பொருளியலாளர்களின் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றை விளக்குக?

(08 புள்ளிகள்)

(a) 'பிறீட்டின்,' 'பெல்ப்ஸ்' என்பவர்களால் விளக்கப்பட்ட "வேலையின்மையின் இயற்கை வீதம்" என்ற மாதிரியை சுருக்கமாக விளக்கி அது எவ்வாறு பழம் பொருளியலாளர் மாதிரியை ஒத்ததாகக் காண்பப்படுகிறது என்று குறிப்பிடுக.

(12 புள்ளிகள்)

(b) கெயின்சிய வாதத்தின் சிறப்பம்சங்கள் எவை? கெயின்சிய வாதிகளிடையே ஏற்பட்ட பிளவு காரணமாக அவர்களது கருத்துக்களில் ஏற்பட்ட பிரதான மாற்றங்களை விளக்குக.

(08 புள்ளிகள்)

03.(a) கெயின்சிய கோட்பாடுகளை விமர்சித்து எழுந்த "கெயின்சுக்குப் பிந்தி அபிவிருத்திகளை" (post-keynsian Development) சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்

(b) புதிய பழம் பொருளியலாளர் மாதிரியானது எவ்வாறு கெயின்சி மாதிரியிலிருந்து வேறுபடுகிறது என்பதை வரைபடம் ஒன்றைப் பயன்படுத் விளக்குக.

(12 புள்ளிகள்

04.(a) "நாணயக் கொள்கையொன்றின் பிரதான நோக்கம் உத்தம வளப்பயன்பா என்பதேயாகும்." ஆராய்க.

(08 புள்ளிகள்

(b) வீச்சு காலத்தில் அதனைக் கட்டுப்படுத்துவதில் வங்கி வீதம், பகிரங் சந்தை நடவடிக்கைகள் என்பன தாக்கமுள்ள கருவிகளாகச் செயற்ப முடியுமா? விளக்கம் தருக.

(08 புள்ளிகள்

(c) அபிவிருத்தியடைந்துவரும் நாடொன்றில் நாணயக்கொள்கையின் வரையறைகளை (limitations) எடுத்துரைக்க.

(04 புள்ளிகள்

05. சிறுகுறிப்பு எழுதுக.

(a) திரவப்பொறி நிலை

(b) நாணய வாதம்

(c) நாணயக் கொள்கையும் பொருளாதார வளர்ச்சியும்

(d) இலங்கையில் வங்கி சாரா நிதி நிறுவனங்கள்

(20 புள்ளிகள்

*****